Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 24 | [06-04-1993] | செவ்வாய்க்கிழமை | ஓசை 47

நூலகம் -6-4-1993 யாழ்ப்பாணம்

## 10 இலட்சம் பெறுமதியான கொப்பிகள் வந்துள்ளன

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கென யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்தினால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் "குமண" கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேற்படி கொப்பிகள் இறக்கி முடிந்ததும் யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்தினால் ஒவ்வொரு கல்விக் கோட்டங்கள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மேலும் இதற்கென

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப ஐரோப்பிய நாடுகள் தீவிர முயற்சி

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் ஐரோப்பிய நாடுகள் தீவிர கவனம் செலுத்தி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியா, இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பி வைப்பதைத் தொடர்ந்தே இதுகுறித்து இந் நாடுகள் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளன.

அத்தோடு கொழும்பு போன்ற நகர்களில் தற்பொழுது தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்வதாகவும் ஐரோப்பி நாடுகள் பல கருதுவதினாலுமே அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் தெரியவருகின்றது. இத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் நோர்வே, சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகள் பெரும் அக்கறை காட்டி வருவதாகவும் அறியவருகின்றன.

ஐரோப்பிய அரசுகள் இலங்கைத் தமிழ் அகதிகளைப் பலவந்தமாகத் திருப்பி அனுப்பத் திட்டமிட்டு வருவதாக அறியப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரித் தங்யிருக்கும் இலங்கைத் தமிழர்களை இந்தியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி ஐரோப்பிய நாடுகளின் அரச அதிகாரிகள் திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

டென்மார்க், நோர்வே, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் பொய்யான தரவுகளின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டம்பற்றி ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் கொழும்பில் கூடி ஆலோசித்த சமயம், அகதிகளாக நோர்வேக்குள் நுழையும் இலங்கைத் தமிழர்கள், பத்துப் பேரில் எட்டுப்பேர் 'போலிகள்' என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கட்டுவன் பகுதியில் 'சத்பல' நடவடிக்கையாம்

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் கட்டுவன் பகுதியில் இராணுவத்தினர் 'சத்பல' என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கட்டுவன் பகுதியில் இராணுவ நிலைகள் மீது புலிகள் தாக்குதல் நடத்த பெரிய அளவில் திட்டமிடுவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே அங்கு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## 68 ஆயிரம் மக்கள் மட்டக்களப்பில் அகதிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில், 68411 பேர் இன்னமும் அகதிகளாக இருப்பதாக அரசாங்க சார்பு புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகின்றது. 16,490 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் இருபது முகாம்களில் வைத்து பராமரிக்கப் படுவதாகவும் மேலும் கூறப் பட்டுள்ளது.

## இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஜ. ஐ. தே. க. ஆதரிக்கும்

(கொழும்பு)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எமது முன்னணி ஆதரித்து நிற்கும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான காமினி திஸாநாயக்கா கூறியுள்ளார்.

1987-ம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஜே. ஆர்.-ராஜீவ் ஒப்பந்தத்தை தமது முன்னணி இனப்பிரச்சினைத் தீர்விற்காக ஆதரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜ. ஐ. தே. மு.வைவிட அதிகம் வாக்குகள் பெற வேண்டும்

### - அநுராவின் விருப்பம்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களையே ஆதரித்துப் பேசுவேன் என்று சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், எதிர்க்கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில் தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வது அவசியமானதாகும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் எமது கட்சி வேட்பாளர்களை விட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்கள் மிகக் குறைவான அளவிலேயே வாக்குகளைப் பெறுவதை அனைவரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பாராளுமன்ற தெரிவுக்குழு புலிகளுடன் பேசவேண்டும்

### - சிறினிவாசன் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கான பாராளுமன்றத் தெரி...

...னிவாசன் கூறியுள்ளார்.

அவர் தெரிவுக் குழுவின் தலைவரான மங்கள முனசிங்க...

## மூன்று ராணுவ வலையங்களாக கிழக்கு மாகாணம் பிரிப்பு

தென் தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கைகளை சுலபமாக மேற்கொள்ளும் பொருட்டு கிழக்கு மாகாணம் 3 இராணுவ வலையங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று இராணுவ வலையங்களுக்கும் பொறுப்பாக மூன்று உயர் இராணுவ அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென் மட்டக்களப்பு அதிகாரி பிரிகேடியர் குணவர்தனா இத்தகவலை ஊர்ஜிதப் படுத்தியுள்ளார். பரந்தளவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலையில் அதை சுலபமாக்கவும் தனித்தனி இராணுவ நிர்வாக அமைப்பை ஏற்படுத்தவுமே தென் தமிழீழம் 3 இராணுவ வலையமாக பிரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## பரீட்சைக்குத் தோற்றாத பட்டதாரிகளுக்கும் நியமனம்

[யாழ்ப்பாணம்]

பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றாவிட்டாலும். பட்டதாரிகளுக்கு பயிலுநர் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல தமிழ் பட்டதாரிகள் ஆசிரிய நியமனத்திற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தும், நாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலை காரணமாகவும், அனுமதி அட்டை கிடைக்காதபடியினாலும் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போய்விட்டது. பரீட்சைக்குத் தோற்றிய சகலருக்கும் நியமனம் வழங்ுவதென தீர்மானிக்கப்பட்டமையினால், பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனவர்களுக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி அமைச்சு அலுவலகம் மாணவர்களால் முற்றுகை

தேசிய ஆயுர்வேதபல்கலைக் கழக மாணவர்கள் நேற்று உயர்கல்வி அமைச்சு அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இதனால் பல மணி நேரம் உயர்கல்வி அமைச்சு செயலிழந்தது.

சுமார் 1000க்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். நேற்று இரவு சுகாதார அமைச்சுடன் இவர்கள் பேச்சு நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றதாக தெரியவருகிறது.

### மாகாண சபைத்தேர்தல்

## மாவட்ட அடிப்படையில் மனுத் தாக்கல் ஆரம்பம்

எதிர்வரும் மாகாண சபை தேர்தலை முன்னிட்டு இரு கட்சிகளும், இரு சுயேட்சைக் குழுக்களும் மாவட்ட அடிப்படையில் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன.

ஜனநாய ஐக்கியதேசிய கட்சி குருநாகல் மாவட்டத்திற்கு டி. பிரேமச்சந்திர தலைமையிலும் ... விற்கு திருமதி சிறிமா திசாநாயக்க தலைமையிலும், இரத்தினபுரி, கேகாலை, டி. பீ. கலுகல்ல தலைமையிலும் போட்டியிடுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சி குருநாகலைக்கு காமினி ஜயவிக்கிரம பெரேராவும், பதுளை பேர்சி சமரவீரவும், கண்டி ... திசாநாயக்கா

- அநுராவின் விருப்பம்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களையே ஆதரித்துப் பேசுவேன் என்று சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா கூறிஉள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எதிர்க்கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில் தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வது அவசியமானதாகும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் எமது கட்சி வேட்பாளர்களை விட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்கள் மிகக் குறைவான அளவிலேயே வாக்குகளைப் பெறுவதை அனைவரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பாராளுமன்ற தெரிவுக்குழு புலிகளுடன் பேசவேண்டும்

- சிறினிவாசன் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சிறினிவாசன் கூறியுள்ளார்.

அவர் தெரிவுக் குழுவின் தலைவரான மங்கள முனசிங்கவிடம் இதற்கான கோரிக்கையை நேரடியாக விடுத்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 20 பெண் அதிரடிப்படையினர் பயிற்சியை முடித்தனர்

அதிரடிப் படைப்பயிற்சியை முடித்து நேற்று வெளியேறிய ஒரு தொகுதி அதிரடிப்படையினரில் 20 பெண் அதிரடிப் படையினரும் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறினர். இந்த விசேட அதிரடிப் படையினரின் அணி வகுப்பு நேற்று மாலை கட்டுகுருந்த அதிரடிப் படைமுகாமில் இடம் பெற்றது.

விசேட அதிரடிப்படையில் இப்போது புதிதாக பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## குமணவில் வந்த தபால்கள் உடனடியாக விநியோகம்

[வடமராட்சி]

கப்பலில் எடுத்துவரப்படும் பொருள்கள் பற்றிய விபரப் பட்டியலில் தபால் பொதிகளில் விபரம் குறிப்பிடப்படாத போதிலும் ''குமண'' கப்பலில் 105 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டு நேற்று மாலை 5-30 மணியளவில் இறக்கப்பட்டன.

மேற்குறித்த தபால் பொதிகள் தபால் திணைக்கள உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது.

இத்தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு உடனடியாக விநியோகிக்கப்படுமென தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடமாகாண அஞ்சல் நாயகம் திரு. சேதுகாவலர் இன்று குமாரி கப்பல் மூலம் கொழும்பு செல்லவுள்ளார்.

இவர் தனது கொழும்பு விஜயத்தின் போது இதுவரை கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுவந்த வடமாகாண தபால் நிலைய கணக்குகள் தற்போது வடமாகாண பிராந்திய அஞ்சல் அதிபர் மாவட்ட அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது தொடர்பாக அவ் வேலைகள் சம்பந்தப்பட்ட மேலதிக தகவல்களை அறிவதுடன் தபால் விநியோக சிராக்கல் குறித்தும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார். (சி)(யோ)

## வெளிவாரி அனுமதி அட்டை செயலகத்தில் பெறலாம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் நடைபெறவுள்ள பேராதனைப்பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்பு (ஜீ.ஏ.கியூ) பரீட்சைக்கான பரீட்சை அனுமதிப் பத்திரமும் நேரசூசிகையும் அரசாங்க அதிபரினால் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அனுமதி அட்டையையும் நேரசூசிகையையும் யாழ். செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சிவபாதம் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் தெரிவித்தார். [சி]

வந்தமாகத் திருப்பி அனுப்பத் திட்டமிட்டு வருவதாக அறியப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரித் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களை இந்தியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி ஐரோப்பிய நாடுகளின் டுள்ளார்கள்.

டென்மார்க், நோர்வே, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் பொய்யான தரவுகளின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டம் பற்றி

அண்மையில் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் கொழும்பில் கூடி ஆலோசித்த சமயம், அகதிகளாக நோர்வேக்குள் நுழையும் இலங்கைத் தமிழர்கள், பத்துப் பேரில் எட்டுப்பேர் 'போலிகள்' என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மூன்று ராணுவ வலையங்களாக கிழக்கு மாகாணம் பிரிப்பு

தென் தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கைகளை சுலபமாக மேற்கொள்ளும் பொருட்டு கிழக்கு மாகாணம் 3 இராணுவ வலையங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று இராணுவ வலையங்களுக்கும் பொறுப்பாக மூன்று உயர் இராணுவ அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென் மட்டக்களப்பு அதிகாரி பிரிகேடியர் குணவர்தனா இத்தகவலை ஊர்ஜிதப் படுத்தியுள்ளார். பரந்தளவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலையில் அதை சுலபமாக்கவும் தனித் தனி இராணுவ நிர்வாக அமைப்பை ஏற்படுத்தவுமே தென் தமிழீழம் 3 இராணுவ வலையமாக பிரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# 39 ஆம் கிராம மக்கள் மீது படையினர் கொடூரம்

[மட்டக்களப்பு]

கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் 36 ஆம்கிராமம் பதுளைச் சந்தியிலிருந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர், 39ஆம் கிராமம் 3ஆம் வட்டாரத்தில் அமைந்த தமிழர் வீடுகளினுள் புகுந்து மக்களைத் துன்புறுத்தியுள்ளனர்.

மேலும் மூன்று பிள்ளைகளின் தாயாகிய துரைசிங்கம் தங்கமலர் (வயது 20) என்பவரை கொடூரமான முறையில் தாக்கி கழுத்திலிருந்த தங்க நகையைக் கழற்றிச் சென்றுள்ளனர்.

# தப்பிஓடிய படையை தேடி 40-ம் கிராமம் சுற்றிவளைப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு 40ஆம் கிராம சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நான்கு சிப்பாய்கள் கடந்த வெள்ளியன்று காலை 9-15 மணியளவில் தப்பி ஓடியுள்ளனர்.

இவர்களைத் தேடி அம்முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் காலை 11-45 மணியளவில் 40 ஆம் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர்.

இவர்கள் அங்குள்ள மக்களிடம் ''எமது நான்கு ஐயாக்களை கண்டீர்களா?'' என விசாரித்ததுடன் கடும் தேடுதலையும் மேற்கொண்டனர். இறுதியில் ஓடியவர்கள் எவரையும் பிடிக்கமுடியாத நிலையில் இவர்கள் முகாம் திரும்பினர்.

# போராட்டத்தின் வெற்றிக்கு கல்வி அறிவு அவசியம்

·இளங்குமரன்

''தமிழரின் கடந்த கால வரலாற்றில் கல்வி போராட்டத்திற்கு பயன்படாத காரணத்தால் உடல் வலுவும். ஆட்பலமும், வீரமும் மிகுதியாகக் கொண்ட படை தமிழரிடம் இருந்தபோதிலும் எங்கிருந்தோ வந்த சிறு படைகளின் ஆற்றல் மிகு போர் கருவிகளுக்கு எதிர் நிற்க முடியாது தோல்வியடைய நேரிட்டது'' இவ்வாறு தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் நேற்று 'புலிகளின் குரல்' வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில், ''அக்காலங்களில் தமிழர் வீரத்துடன் போரிட்டபோதும் ஆற்றலுடைய பீரங்கிக்கும், துப்பாக்கிகளுக்கும் முன் அறிவியலால் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களின்றி வெறும் வாளும் வேலும் கொண்டு போரிட்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மாணவர்களால் முற்றுகை

தேசிய ஆயுர்வேதபல்கலைக் கழக மாணவர்கள் நேற்று உயர்கல்வி அமைச்சு அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இதனால் பல மணிநேரம் உயர்கல்வி அமைச்சு செயலிழந்தது.

சுமார் 1000க்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். நேற்று இரவு சுகாதார அமைச்சுடன் இவர்கள் பேச்சு நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றதாக தெரியவருகிறது.

மாகாண சபைத்தேர்தல்

## மாவட்ட அடிப்படையில் மனுத் தாக்கல் ஆரம்பம்

எதிர்வரும் மாகாண சபை தேர்தலை முன்னிட்டு இரு கட்சிகளும், இரு சுயேட்சைக் குழுக்களும் மாவட்ட அடிப்படையில் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன.

ஜனநாய ஐக்கியதேசிய கட்சி குருநாகல் மாவட்டத்திற்கு டி. பிரேமச்சந்திர தலைமையிலும் பதுளை மாவட்டத்திற்கு சமரவீர வன்னி தலைமையிலும், புத்தளம் மாவட்டத்திற்கு சத்தா திஸ்ஸ வடிவங்காம தலைமையிலும் நுவரெலியாவிற்கு திருமதி சிறிமா திசாநாயக்க தலைமையிலும், இரத்தினபுரி, கேகாலை, டி. பீ. கலுகல்ல தலைமையிலும் போட்டியிடுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சி குருநாகலைக்கு காமினி ஜயவிக்கிரம பெரேராவும், பதுளை பேர்சி சமரவீரவும், கண்டி புஞ்சி பண்டா திசாநாயக்காவும், புத்தளம் சாளிய பெரேராவும் மாத்தளை ஆர். பி. ஏக்கநாயக்காவும் போட்டியிடுகின்றனர்.

## மார்புநோய் நிலையம் நாவற்குழியில் அமையும்

[யாழ்ப்பாணம்]

மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை நிலையம் நாவற்குழிக்கு மாற்றப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி மருத்துவமனை இராணுவப் பிடிக்குள் அகப்பட்டு செயலிழந்துள்ளது தெரிந்ததே. எனவே இச் சிகிச்சை நிலையத்தை மீண்டும் வேறோர் இடத்தில் இயக்குவதற்கு யாழ் மாவட்ட சுகாதார திணைக்களத்தினர் பல தடவை கொழும்பில் சுகாதார அமைச்சு வட்டாரங்களிடம் இம்மருத்துவமனையின் அவசியம் பற்றி எடுத்து விளக்கிய பின்பே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இவ் அதிகாரிகள் கொழும்பிலிருந்து குமண கப்பல் மூலம் குடாநாட்டுக்கு திரும்பியுள்ளதாகவும் மருத்துவ மனைக்கு நாவற்குழி பகுதியில் உள்ள மூன்று வீடுகளை எடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க இம் மருத்துவ மனைக்குத் தேவையான தளபாடங்கள் அனைத்தும் மயிலிட்டி மருத்துவமனையில் சிக்குண்டுள்ளதால் கொழும்பிலிருந்து அடுத்து வரும கப்பல் மூலம் தேவையான தளபாடங்கள் எடுத்து வரப்பட உள்ளதாகவும் அவை வந்ததும் மே அல்லது ஜூன் மாதமளவில் இயங்கத்தொடங்குமென தெரியவருகின்றது. (சி)

## குண்டுத்தாக்குதலுக்கு திட்டமிடுபவர் கொழும்பிலாம்

(கொழும்பு)

புலிகளின், வெடிகுண்டுதாக்குதலுக்குத் திட்டமிடும் உறுப்பினர் ஒருவர் கொழும்பு வந்துள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனித்தம்பி சோமநாதன் ( நீலன் ) என்னும் 26 வயதுடைய இளைஞரே இவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இவர் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கிளாலி பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

## 9 மணிக்குமுன் தபால்களை சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

இன்று காலை ஒன்பது மணிக்கு முன்பாக தபால்களைச் சேர்க்கும்படி வட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கொம்பக்ட் டிஸ்க்கில் புதிய பாடல்கள்

அண்மையில் வெளியான புதிய பாடல்கள் COMPACT DISC இல் வெளிவந்துள்ளது மாஸ்ரர் பிரதியாகப் பதிவு செய்ய விரும்பும் ஒலிப்பதிவு நிலையங்கள் - தொடர்பு கொள்ளுங்கள் S. சந்திரமோகன் (மோகன்)ஷண் றெக்கோடிங் ஸ்பொட், நவீன சந்தை, யாழ்நகர். (4082)

### சிரசே பிரதானம்

சீயக்காய், வெந்தயம், பயறு, எலுமிச்சம் கோது மற்றும் கேச ஆரோக்கியத்திற்கு உதவும் மூலிகைகளும் கொண்டு தயார் செய்தது ஒலிவ் ஸ்நானப்பவுடர் அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. மில்க் வைற்'' [6329]


### போலியோ தடுப்பு

(யாழ்ப்பாணம்)

போலியோ நோய் யாழ். குடாநாட்டில் தோன்றக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது. ஆகவே, உடனடியாகக் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு மக்களை யாழ். சுகாதார சேவைகள்திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

1987ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இந்நோய் அதிகமான சிறார்களைப் பாதித்தது. ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை இந்நோய்சிறார்களை பாதிக்கும் என்பதால் இவ்வாண்டில் போலியோ கூடுதலாகச் சிறுவர்களைப் பாதிக்க் கூடும் என சுகாதார வட்டாரங்கள் அச்சம் தெரிவிக்கின்றன.

## தேர்தல் சட்டங்கள் கேலிக்கூத்து

# பாராளுமன்ற வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை இல்லை

**- தினேஷ் குணவர்த்தனா விவரிப்பு**

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் காலியாக இருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளது இடத்தை நிரப்புவதற்கு தேர்தல் ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கமுடியவில்லை இதனால் தேர்தல் சட்டங்களே வெறும் கேலிக் கூத்துக்கள் போலாகியுள்ளது என்றுமக்கள் ஐக்கியமுன்ன்ணியின்பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனா அண்மையில் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது, வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணபதில் ஐ தே.கவிற்கு நிலையான ஒரு கொள்கை கிடையாது மதில் மேல் பூனை போல எந்தப் பக்கமும் பாய்வதற்கு தயாராக இருப்பது போன்றதான நிலையே வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது.

மாகாண சபைகள் என்பன வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே கொண்டு வரப்பட்டதாக சொல்லப்பட்டது. ஏனைய மாகாணங்கள் இதனைக்கோரவில்லை ஆனால் வடக்கு கிழக்கு மாகாண சபைகள்செயற்படவில்லை. ஏனைய பிரதேசங்களில் இவை செயற்பட்டு என்ன பயன்? இந்தமாகாண சபை அமைப்பு அரசுக்கு ஒரு தேவையற்ற செலவினம்இந்த விடயத்தை தேசிய மட்டத்தில் மறு பரிசீலனை செய்து கடந்த ஐந்து வருடங்களாக மக்களின் தோள்களில் சுமத்தப்பட்டிருக்கும் சுமைகள் நீக்கப்படல் வேண்டும். என்றும் தெரிவித்தார்.

### புதிய பாலர் பாடசாலை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அம்பன் கொட்டோடைக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் குடியிருப்பான ராஜன் நகரில் புதிய பாலர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பாலர்பாடசாலையில் 60 சிறுவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பாலர் பாடசாலைத் திறப்பு விழா தமிழர் புனர்வாழ்வுக்கழக வடமராட்சிப் பிரிவு இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் திரு. சட்டநாதர் செவ்வந்திநாதர் பாலர் பாடசாலையைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

## தடுத்து வைக்கப்பட்டோரை விடுதலை செய்ய வேண்டும்

**சிறிலங்கா அரசிடம் வற்புறுத்து**

(கொழும்பு)

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டோர் மீதான வழக்குகள் உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இல்லையேல் விடுதலை செய்ய வேண்டும் என்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு, மற்றும் மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மூன்றாண்டுகளுக்கு மேலும் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்திற்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தல்கள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள இவ்வேளையில் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.


### மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்ட
## சுற்றுப் போட்டி

மேற்படி போட்டியில் கலந்துகொள்ளும் கழகங்கள் 15-04-1993இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். போட்டிகளில் முதலிடம் பெறும் கழகத்திற்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

பிரவேசக் கட்டணம் 100 ரூபா

விண்ணப்பத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
செயலாளர்
மோகனதாஸ் சனசமூக நிலையம்
மானாவளை,
மட்டுவில், சாவகச்சேரி.

விளையாட்டுக்கழக பொறுப்பாளர். (4633) இ. பாக்கியநாதன் நிலைய செயலாளர்

## தேவை

பொறிமுறை பட வரைஞர்கள்
(MECHANICAL DRAUGHTSMEN)

இத்துறையில் அனுபவம் மிகுந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 15-04-1993

விளம்பர இலக்கம்: 185
மே/பா, ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (4634)

### வாழ்கவென வாழ்த்த வந்தோம்

தாயகத்து மண்ணிலே இனிய தமிழுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இனிய மணம் பரப்பிய சிவகுமாருக்கும், மற்றும் மூதறிஞர்களுக்கும் எம் இதயத்துப்புஷ்பங்கள் எல்லாம் காணிக்கையாக்கி வாழ்க வாழ்கவென வாழ்த்த வந்தோம்...

## மழலைப் புகைப்பட நிலையம்

**பேபி போட்டோ**

பலாலி வீதி, திருநெல்வேலி.

[4635]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L** பிரிவு III
DAY CLASSES [8.00 - 2.0 ]
ஆரம்பம்: 08-04-93, 8.0 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலங்கள் நடைபெறும்
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்,

(சி-6336)

## OL DAY CLASS
பகல் நேர வகுப்பு

ஏப்ரல் - 10 இல் ஆரம்பமாகிறது!

முன் கூட்டியே பெயர்களை பதிந்து உங்கள் இடங்களை உறுதி செய்து கொள்ளுங்கள்

20 வருட இணையற்ற சேவையில் உயர்ந்து விளங்கும் நிறுவனம்

ESTD:- 1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

(இ-6343)

ஏப்ரல் 10 முதல்

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

## A/L-95

இரசாயனவியல்
திரு. மகாதேவா
பௌதீகவியல்
திரு. வர்ணம்
தாவரவியல்
திரு. ஐங்கரநேசன்
விலங்கியல்
திரு. கெங்காதரன்
தூய/பிரயோக கணிதம்

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L** பிரிவு III

**DAY CLASSES** [8.00 - 2.0 ]

ஆரம்பம்: 08-04-93, 8.0 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலங்கள் நடைபெறும்
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி-6336)

# OL DAY CLASS

பகல் நேர வகுப்பு

ஏப்ரல் - 10 இல்

**ஆரம்பமாகிறது!**

முன் கூட்டியே பெயர்களை பதிந்து உங்கள் இடங்களை உறுதி செய்து கொள்ளுங்கள்

20 வருட இ௱ணயற்ற சேவையில் உயர்ந்து விளங்கும் நிறுவனம்

ESTD:- 1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

(சி-6343)

# AL-95

இரசாயனவியல்

**திரு. மகாதேவா**

பௌதீகவியல்

**திரு. வர்ணம்**

தாவரவியல்

**திரு. ஐங்கரநேசன்**

விலங்கியல்

**திரு. கெங்காதரன்**

தூய/பிரயோககணிதம்

**திரு. கிருஸ்ணா**

(சி-6338)

## மருதடி விநாயகர் மகோற்சவத்தில்

# சுரபியின் பரிசுத் திட்டம்

❋ இலாபத்தை ஈட்டுதல் நமது இலக்கல்ல... இன்றைய காலத்தடையை உடைத்து எழுந்து நடப்பதே எமது இலக்கு.

உங்கள் உடலுக்கு உறுதியூட்டும் ஊட்டச் சத்துக்களை அள்ளி வழங்கு கிறது சுரபி பழரசப்பானங்கள்.

மகோற்சவ காலத்தில் சுரபியின் பல்லாயிரக்கணக்கான "றெனோல்ட் பேனாக்கள்" உங்களுக்காக காத்திருக்கின்றன.

பரிசுக்கு முந்துங்கள் வெற்றியை ஏந்துங்கள்

பரிசினை வென்றிட நீங்கள் செய்ய வேண்டியது இது தான்:-

சிறிதும் சேதமில்லாத வெற்று ஜாம் போத்தல்கள், வெற்று 300ml Fanta, CoCo Cola Pepsi-Cola, Sprite, Mirinda போத்தல்கள், பியர் மற்றும் கோடியல் போத்தல்களை கோவில் வீதியில் உள்ள விற்பனை நிலையத் தில் கொடுத்து ஒவ்வொரு போத்தலுக்கும் ஒவ்வொரு "றெனோல்ட் பேனாவை" இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பேனா மூடிக்குள் எம்மால் அடையாளமிடப்பட்ட "லேபல்" காணப்பட்டால் மேலும் ஒரு பேனாவை இலவசமாக பெற்றுக் கொ௱ளுங்கள்

குறிப்பு -

சுரபியின் தயாரிப்புக்களான மா, தோடை, எலுமிச்சை, திராட்சை, நெல்லி ஆகியவற்றிலிருந்து தயாராகும் மென்பானங்கள், கோடியல், ஜாம், தக்காளி, சோஸ், ஊறுகாய், மோர்மிளகாய், அப்பளம் மற்றும் கம்பு மா. குரக்கன் ம௱, உழுந்துமா ஆகியவற்றில் இருந்து தாயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகளை எம்மால் கோவில்வீதி யில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய்.

[சி-6342]

# BECON

## (பாரதிதாசன்)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**93 O/L DAY CLASS**

ஆரம்பம்: **06-04-93** 8.00 மணி

| | |
|---|---|
| கணிதம் | — சதீஸ் |
| விஞ்ஞானம் | — T. S. S. மோகன் |
| சமூகக்கல்வி | — K. S. முத்துலிங்கம் |
| தமிழ், சமயம் | — கோப்பாய் சிவம் |
| வர்த்தகம் | — ராஜன் |
| ஆங்கிலம் | — பிரபல ஆசிரியர் |

★ வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.
★ பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தியாக்கப்படும்.

(சி/6332)

# ஏப்ரல 10 முதல்

O/L

க.பொ.த சாதாரணதரம்

பகல்முழுநேரவகுப்பு

**யூனிவேர்சல்**

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

சி-(6337)

# நினைவு கூருகின்றோம்...

## 1993-04-06

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் தொண்ட மானாற்றுப்பகுதியில் எமது காவலரண் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**2ம்-லெப். சின்னக்கோபு** (செந்தில்வடிவேல் சிறிதரன் - வல்வெட்டித்துறை-யாழ்)

**2ம் -லெப். பட்டாபி** (செந்தில்வடிவேல் சாந்தகுமார் தோப்புவளவு, நெல்லியடி- -கரவெட்டி, யாழ்)

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குத லில் வீரச்சாவெய்திய.

**அன்ரன்/ரஞ்சன்** (அருச்சுனன் ரஞ்சன்-பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி-யாழ்)

1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - தண்ணீரூற்றுப் பகுதியில் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதல் சம்ப வம் ஒன்றின் போது விழு ப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். கமல்** (கந்தையா - கமலேஸ்வரன் - பழம்பாசி, நெடுங்கேணி-மணலாறு)

1991 ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணு வத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈரலிக்குளத்தைச் சேர்ந்த தமிழ்விவசாயி

1992 ஆம் ஆண்டு மட்டு-புளிச்சங்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**யப்பான் லூக்காஸ்** (சின்னத்தம்பி குமார் - ஆலை யடிவேம்பு, அக்கரைப்பற்று-அம்பாறை)

**யோகேஸ்வரன்** (தங்கராசா சாந்தலிங்கம்-இருதய புரம்-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/6340)

### சிந்தனைக்கு

உன்னுடைய நண்பனுக்கு ஆலோசனை கூறும் போது, அவன் நன்மையை நாடு; அவனைத் திருப்தி செய்ய வேண்டுமென்று எண்ணாதே.

— ஸோலொன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## ரொனி டீ மெல்லின் ஞான போதனை

சில வருடங்கள் லண்டனில் அரசியல் அஞ்ஞாதவாசம் இருந்து விட்டு கடந்தவருட இறுதியில் இலங்கை திரும்பிய முன்னாள் நிதி அமைச்சர் ரொனிடிமெல், மீண்டும் லண்டன் திரும்பு முன்னர் சில அரசியல் போதனைகளை வழங்கிச் சென்றுள்ளார்.

''நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே பொருளாதாரப் பிரச்சினைக்கு முடிவுகாண முடியும். இதனைச் சீர்தூக்கிப் பார்த்து நாட்டின் மீதும், மக்கள் மீதும் அக்கறையுள்ளவர்கள் என்றால், அரசியல்வாதிகள் சமாதானப் பேச்சிற்கு வழி சமைக்க வேண்டும். வரட்டுக் கௌரவம், ஸ்திரமற்ற அரசியல் கொள்கையும் நாட்டிற்கு நன்மை தரப் போவதில்லை. இதனை ஒவ்வொரு அரசியல் வாதியும் உணரவேண்டும் அல்லது மக்கள் உணர்த்த வேண்டும்'' இதுவே முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டீ மெல்லின் போதனையின் பிரதான பகுதியாகும்.

அதாவது, பொருளாதாரத்தின் பெரும்பங்கு இராணுவச் செலவீட்டிற்கு ஒதுக்கப்படுகின்றது. வெளிப்படையாக வரவு – செலவுத்திட்டத்தில் 2,300 கோடி ரூபா பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கப்படுவதாகஅரசாங்கம் கூறிக்கொண்டு வருகின்ற போதிலும், பாதுகாப்புச் செலவீடு அதனைவிட அதிகமாகும். நாட்டிலுள்ள வளங்கள் யாவும் பாதுகாப்புத்துறைக்கென திருப்பிவிடப்பட்ட நிலையில், நாட்டில் அபிவிருத்தி என்பது ஏற்படப் போவதில்லை என்பதே முன்னாள் அமைச்சர் ரொனி டீ மெல்லின் ஆதங்கமாமாகும். இதேவேளை, அரசியல்வாதிகள் தமது வரட்டுக் கௌரவத்தையும் ஸ்திரமற்ற அரசியல் கொள்கையையும் சிங்களவர்கள் கைவிடவேண்டிய காலம் வந்துவிட்டது என்பதும் அவரின் இன்றைய அரசியல் குறித்த மதிப்பீடாகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றே வழி என்ற ரீதியில் செயற்பட்டு வரும் சிறிலங்கா அரசின் அணுகுமுறையானது வெற்றிதரப் போவதில்லை என்று தற்பொழுது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. 1977ஆம் ஆண்டில், அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழருக்கு எதிராக செய்த யுத்த பிரகடனத்தில் இற்றைவரை சிங்கள இராணுவத்தால் வெற்றிபெற முடியவில்லை. தற்பொழுது யுத்தத்தில் வெற்றி ஈட்டுவதே எமது ...

# ஆசியாவில்30வீதசிறுவர்கள் போசாக்கின்மையால்பாதிப்பு

## யுனிசெவ் ஆய்வு கூறுகிறது

சோமாலியாவில்சிறுவர்கள் படும் அவஸ்தையே இப்போது உலகச் செய்தியாக சித்திரிக்கப்படுகிறது. ஆபிரிக்காவில் சோமாலியச் சிறுவர்களது நிலைவரம் சித்திரிக்கப்படுகிறது. ஆனாலும் ஆசியாவில் சிறுவர்களது நிலைவரம் கவனத்திற்கு எடுக்கப்படுவதில்லை.

அண்மையில் யுனிசெவ்மேற்கொண்ட ஆய்வின்படி ஆசியாவில் முப்பது வீதமானசிறுவர்கள் முழு ஆபிரிக்க கண்டத்தையும் விட போசாக்கு சக்தியின்றி காணப்படுவதாக குறிப்பிடப்பட்டது. ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் முப்பது கோடி மக்கள் தினமும் பசிக் கொடுமைக்கு ஆளாகி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

ஆபிரிக்காவில் போசாக்கின்மையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிகமானோர்பாதிக்கப்பட்டுள்ளனர். மனநோயினாலும் பிறவியாதிகளினாலும் பெரும்பாலானோர்துன்பத்திற்கு ஆளாகியிருக்கின்றனர்.

மணிலாவிலிருக்கும் உலக சுகாதாரநிறுவனத்தின்ஆலோசகர் இயன்டன்டோன்ஹில்லியின் தகவலின்படி ஆபிரிக்காவில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் அளவுக்கு ஆசியாவில் நிலைமை இல்லை ஆனால் பகிர்ந்தளித்தலே உண்மையான பிரச்சினை என்று குறிப்பிடுகிறார் பகிர்ந்தளித்தலானது அடிக்கடி வறுமை இயற்கை அழிவுகள் என்பவற்றின் காரணமாகவே ஏற்படுகிறது.

பிலிப்பைன்ஸில் வருடாந்த சராசரி வருமானமானது 730 அமெரிக்க டாலர்களாகும். குடும்ப உறவினர்களுக்கு உணவளிப்பதற்கு இதுபோதுமானதாகும். மணிலாவில் பிறக்கும்பத்துப்பிள்ளைகளில் ஐவர் சுவாசமின்றி இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பிலிப்பைன்ஸ் சிறுவர்களில் 34 வீதத்தினர் எடைகுறைந்தவர்களாக இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸைவிட இந்தியாவில் எடை குறைந்த சிறுவர்களது தொகை 63 வீதமாகும் இந்த தொகை பங்களா தேசில் 66 வீதமாகும். பௌதிக போசாக்கின்மை காரணமாக பாடசாலைகளில் மாணவர்களது தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வறுமையும், பஞ்சமும் காலங்காலமாக இங்கு தொடர்ந்து கொண்டேயிருக்கிறது

கிராமப் புறங்களில் போசாக்கு சக்தியின்மை பெரும் பிரச்சினையாகவே உள்ளது சிலவேளைகளில் போசாக்கு சக்தியின்மையை நிவர்த்திப்பதற்கு எத்தகைய உணவு தேவை என்பதுபற்றிய அறிவும் தேவைப்படுகிறது. போசாக்கு சக்தியின்மை ஆசியாவின் பல பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்தி யிருக்கின்றன.

கம்பூச்சியாவில் காமரூச்கிளர்ச்சியாளர்களது பிரசன்னம் இலங்கையில் பிரிவினவாத கிளர்ச்சியாளர்களது நடவடிக்கை, பிலிப்பைன்ஸில் இருபத்துமூன்று வருடகாலமாக தொடரும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி என்பன மரணம், பௌதிக பொருத்தமற்ற தன்மையைதோற்றுவித்திருக்கின்றன.

வயல் வெளிகளும், பயிர்களும் அழிவுக்குள்ளாகி யிருக்கின்றன. யுத்த நடவடிக்கைகளுக்காக ஆண்களும் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என டான்டொன் ஹில் விபரித்தார். நிச்சயமற்ற நிலைமை காரணமாக உணவு தேடுவதிலும் கஷ்டநிலை இருக்கின்றது.

கம்பூச்சியாவில் தொடரும் யுத்தம் காரணமாக 35 வீதமளவுக்கு தாய்மார்களை நெருக்கடி நிலைக்குள்ளாக்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இயற்கை அழிவுகளான வெள்ளப் பெருக்கு, புயல், சூறாவளி, நிலநடுக்கம் என்பனவும் யுத்தத்துக்கு அமைவானதேயாகும் ஒருசில நிமிடத்தில் முழு கிராமத்தையே அழிவுக்குள்ளாக்கிவிடும் அளவுக்கு பேரழிவை ஏற்படுத்தி விடுகிறது. பல ஆசிய நாடுகளில் எரிமலை வெடிப்பும் ஒருவகையில் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. தென்கிழக்காசியாவில் புயலும், வெள்ளப் பெருக்கும் மற்றொரு வகையில் ஆபத்தை தோற்றுவித்துள்ளன.

தெற்காசியாவில் புயல் பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. 1991இல் பங்களாதேசத்தில் ஒரு லட்சம் பேர் இதற்கு பலியாகியிருக்கிறார்கள். இது மட்டுமன்றி பயிர்கள், ஆயிரக்கணக்கான கால்நடைகளும் பலியாகியிருக்கின்றன.

அரசும், உதவி வழங்குநர்களும் சிறிய அளவிலேயே செய்துள்ளார்கள். நீண்டகாலத்துக்கு புனர்வாழ்வு அளிக்கக் கூடியதான ஏற்பாடுகள் எதுவுமில்லை. பஞ்சம், பசி நீண்ட காலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவானவாகும்.

எவ்வாறாயினும் ஆபிரிக்காவைவிட ஆசிய பிராந்தியத்தில் பஞ்சம் விரைவில் தீரக் கூடிய சாத்தியக்கூறுகள் தெரிகின்றன. இரண்டாயிரம்ஆண்டளவில் ஆசியாவில் போசாக்கின்மை முற்றாகவே தீர்ந்துவிடும்?

# ரஷ்யாவிற்கு 1. 6 பில்லியன் அமெரிக்கா உடன் வழங்கும்

## - அதிபர் பில்கிளிண்டன் தெரிவிப்பு

(வான்கூவர்)

